
www.tamilarangam.net

# தேசிய ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும்

இமயவரம்பன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

~50

# தேசிய ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும்

இமயவரம்பன்

புதிய பூமி வெளியீட்டகத்துடன்
இணைந்து

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Thesia Jananayagamum Suyanirnaya Urimaiyum
Imayavaramban
First Edition : January 1992
Printed at : Surya Achagam, Madras.
Published in association with
"Puthiya Bhoomi Veliyeetagam"
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane,
Madras - 600 002.
Rs. 5-00

தேசிய ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும்
இமயவரம்பன்
முதற் பதிப்பு : ஜனவரி 1992
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை.
வெளியீடு : புதிய பூமி வெளியீட்டகத்துடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை-600 002.
ரூ. 5-00

# பதிப்புரை

கடந்த 1991 மே 4-ம் 5-ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடு தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பது இன்றைய உடனடிக் கடமை என வரையறுத்துக் கொண்டது. இக் கடமையை சகல ஜனநாயக முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து பரந்த ஐக்கிய முன்னணி அடிப்படையில் முன்னெடுப்பதன் மூலமே நிறைவேற்றி நாட்டையும் மக்களையும் இன்றைய அவலத்தில் இருந்து பாதுகாக்க முடியும் எனவும் சுட்டிக் காட்டியது. அத்திசையில் அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளின் உள்ளடக்கி யுள்ள தேசிய ஜனநாயகத்தின் அம்சங்களையும் சுயநிர்ணய உரிமையின் தாற்பரியத்தினையும் மக்கள் மத்தியில் விளக்கும் பன்முக நடவடிக்கையின் ஓர் அம்சமாகவே இந் நூலினை புதிய பூமி வெளியீட்டகம் வெளியிடுகின்றது. இக் கட்டுரை ஏற்கனவே 'செம்பதாகை' சமூக அரசியல் ஆய்வு இதழில் கட்சியின் முடிவிற்கிணங்க இமயவரம்பன் அவர் களால் எழுதப்பட்டு வெளிவந்ததாகும். இந்நூலில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றொரு அம்சமாக இணைந்திருப்பது இனப்பிரச்சினை தீர்வுக்காகப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு புதிய ஜனநாயகக் கட்சி மத்திய குழு அனுப்பிய மகஜராகும்.

இவையிரண்டினையும் புதிய பூமி வெளியீட்டகம் சிறு நூலாக வெளியிடுகின்றது. இதனை சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனம் வெளியிட்டு வைப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்வதுடன் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

புதிய பூமி வெளியீட்டகம்

# தேசிய ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும்

1. ஜனநாயகம், சுயநிர்ணயம் என்ற இரண்டு பதங்களும் அவற்றை எதிர்ப்போரால் தவறாக விளக்கப்படுகின்றன. அவற்றை ஏற்போர் மத்தியிற்கூட அவை பற்றிய குழப்பமான கருத்துக்கள் நிலவுகின்றன. இலங்கை போன்று ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஜனநாயகமும், சுயநிர்ணய உரிமையும் இல்லாமல் சமுதாய நீதி இருக்க முடியாது. சோஷலிஸத்தில் நம்பிக்கை உள்ள ஒவ்வொருவரும் ஜனநாயகத்திலும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையிலும் நம்பிக்கையுடையவராக இருக்க வேண்டும்.

ஜனநாயகம் என்றால் என்ன, சுயநிர்ணயம் என்றால் என்ன என்ற கேள்விக்கு வரைவிலக்கண வடிவில் விடை தர நான் முயலவில்லை. உலகின் மனித சமுதாயங்களின் வேறுபட்ட விருத்தி காரணமாக ஒவ்வொரு சமுதாயமும் தன் வரலாற்றுச் சூழலுக்கேற்ப அவற்றை வித்தியாசமான முறைகளிற் கடைப்பிடிக்கிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் ஆதிக்கத்திலுள்ள சமுதாயச் சக்திகள் அதன் தன்மையைத் தீர்மானிக்கின்றன. சமுதாய மாற்றம் அவசியமாகும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சூழலில் அவை கேள்விக்குள்ளாகின்றன. ஆதிக்கத்தில் உள்ளோருக்கு, அவை பயன் தராத போது அவை மீறப்படுகின்றன. ஆயினும் சில அடிப்படையான பொதுப் பண்புகளை வைத்தே ஒரு சமுதாயம் ஜனநாயக சமுதாயமா இல்லையா என நாம் முடிவு செய்கிறோம். சுயநிர்ணய உரிமையும் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் குறிப்பான தேவை கருதியே அதற்குரிய வடிவத்தையும் எதிர்பார்ப்புக்களையும் பெறுகிறது.

முதலில் ஜனநாயகம் என்றால் என்னவென்று பார்ப்போம். மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மக்களுக்குரிய ஆட்சிமுறை என்ற அழகான விளக்கம் அதன் நடைமுறையை விளக்கப் போதியதல்ல. ஜனநாயகம் ஒரு சமுதாயத்தில் உள்ளவர்களது பொதுவான உடன்பாட்டின் அடிப்படையில் இயங்கும் ஆட்சி அமைப்பைக் குறிக்கும். முழுமையான ஜனநாயகச் சமுதாயத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒவ்வொரு விஷயமும் அதன் உறுப்பினர்களது அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயின் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அதில் உள்ள மற்ற ஒவ்வொருவருக்கும் சமமான பங்காளியாக இருக்க வேண்டும். வர்க்க அடிப்படையிலான் சமுதாயத்தின் பெரும் பகுதியினர் மீது அதன் சிறு பகுதியினர் ஆதிக்கஞ் செலுத்திச் சுரண்டி வாழும் ஒரு அமைப்பில் ஜனநாயகம் என்பது வெறும் தோற்றப்பாடான ஒன்றாகவே இருக்கும். சமமான வாய்ப்புக்களற்ற ஒரு சமுதாயம் ஜனநாயகமானதல்ல. அதிகாரத்தில் உள்ள சிறுபான்மையினர் தகவல் வசதிகள், பிரசார வசதிகள், தொடர்பு சாதனங்கள் என்பன மீது நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏறத்தாழ முழு அதிகாரம் உடையோராய் உள்ள ஒரு அமைப்பு எப்படி ஜனநாயகமாக முடியும்? பெரும்பான்மையோரிடையே அதிக அளவு அதிருப்தி ஏற்படாதவாறும், மாற்று அரசாங்க அதிகாரம் சமுதாய அமைப்பைப் பாரதூரமாக மாற்றியமைக்க முற்படாததோரின் கையில்



இருக்குமாறும் உள்ள அளவில் ஒரு சுரண்டல் சமுதாயத்தில் ஜனநாயகம் என்ற பாவனையைத் தொடரலாம். ஆயினும் உண்மையான அதிகாரம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியாளும் சிறுபான்மையோரிடம் இருக்கும். அரசும் அதன் சகல உறுப்புக்களும் அவர்கட்குச் சேவகம் செய்யும்.

மேலை முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயக ஆட்சி முறை என்பது எவ்வாறு இன்னமும் தொடர முடிகிறது என்பதை ஆழமாக ஆராய்ந்தால் அது மூன்றாம் உலக நாடுகளுக்கு ஜனநாயகம் இல்லாததாலேயே என்ற உண்மை விளங்கும். மூன்றாமுலக நாடுகளை ஈவிரக்கமின்றி சுரண்டுவதை வசதிப்படுத்த அந்த நாடுகளில் ஏகாதிபத்திய விரோத, தேசபக்த சோஷலிஸ முனைப்புள்ள சக்திகளை அடக்கியொடுக்க வேண்டும். எனவே மூன்றாமுலகில் சர்வாதிகார ஆட்சிகளைத் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க ஏகாதிபத்திய வல்லரசுகள் ஏன் உதவுகின்றன என்று விளக்க அவசியமில்லை. மூன்றாமுலக நாடுகளில் உள்நாட்டுக் கலவரங்களையும், மூன்றாமுலக நாடுகளிடையே மோதல்களையும் ஊக்குவிப்பதிலும் ஏகாதிபத்தியத்தின் பங்கு சிறியதல்ல. ஆயினும் எல்லாவற்றிலும் அடிப்படையாக உலகப் பொருளாதாரத்தின் மீது தமது ஆதிக்கத்தின் மூலம் அவை மூன்றாமுலக நாடுகளை வறுமையில் வாடச் செய்து தமது பொருளாதார செழிப்பை நிலைக்க வைக்கின்றன. இதன் மூலம் தமது நாட்டின் சுரண்டப்படும் மக்களுக்கு அவர்களது சமுதாய அமைப்பை மாற்றும் அவசியம் நேராதவாறு காக்க முடிகிறது. அது மட்டுமன்றி மூன்றாமுலக நாடுகளைச் சுரண்டுவதில் அவர்களுக்கு நன்மை உண்டு என்ற உணர்வை மறைமுகமாக ஊட்டவும் முடிகிறது. அவர்களது நாடுகளில் உள்ள செய்தி நிறுவனங்கள் யாவும் பெரு முதலாளிகளினதும் அரசினதும் ஆளுமைக்கு உட்பட்டவை என்பதால் பெரு முதலாளித்துவ நலன்கட்கு எதிரான சக்திகளை வளர விடாது மறிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதிலும் அவர்கள் வெற்றி காண்கின்றனர். இந்த ஏமாற்று வேலைகள் பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுரிமை, ஜனநாயக ரீதியான தெரிவு என்ற போர்வையின் கீழேயே தொடர்கின்றன. ஆயினும் தனி மனித அபிப்பிராயங்கள் சமுதாய மாற்றத்தை ஏற்படுமளவு விருத்தி பெறாதவரை மட்டுமே சகிக்கப்படுகின்றன. இதுதான் முதலாளித்துவ ஜனநாயகம். இது செயலுக்கு வழி வகுக்காத வெறும் பேச்சுக்குரிய சுதந்திரமும், பணம் படைத்தவர்களின் நலன் பேணுவதற்கு எது நல்ல கட்சி என்று ஒன்றைத் தெரிவதற்கான சுதந்திரமுள்ள ''ஜனநாயகம்''. எனவே சோஷலிஸம் இந்த நிராகரிக்கிறது. அது காண விரும்பும் ஜனநாயகம் வேறு.

மனிதர்கட்கு சமமான வாய்ப்புக்களும் தம் உழைப்பின் மீது ஆளுமையும் இருந்தால் மட்டுமே உண்மையான ஜனநாயகம் சாத்தியம் என்பது சோஷலிஸ நிலைப்பாடு. ஜனநாயக முறை அரசியல் அதிகாரத்தின் உச்சத்தை மட்டுமன்றிச் சமுதாயத்தின் ஒவ்வொரு தளத்தையும் தீர்மானிப்பதாக அமைய வேண்டும். இதைச் சாதிப்பதற்கு ஒரு சமுதாயம் பொருளாதார ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் விருத்தியடைந்ததாக இருக்க வேண்டும். மனிதரது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாமல் சோஷலிஸமோ ஜனநாயகமோ நிலைக்க முடியாது. முதலாளித்துவ ஆக்கிரமிப்பு யுத்தமும் ஊடுறுவலும் சாத்தியமான நிலையில் ஒரு மூன்றாமுலக நாட்டில் சோஷலிஸத்தையும் ஜனநாயகத்தையும் நிறுவுவதோ, பேணுவதோ எளிதல்ல. எனவே ஏகாதிபத்தியத்தைக் கனிப்பிலெடுத்தே சோஷலிஸ மாற்றத்தை நோக்கிய நகர்வை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே ஜனநாயகம், சோஷலிஸம் என்ற இணைந்த குறிக்கோள்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், பொருளாதாரச் சுய சார்பு, நாடுகளின் சுயாதிபத்தியம், தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்ற தேவைகளுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.



2. தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி எந்த உண்மையான மார்க்ஸியவாதிக்கும் தடுமாற்றம் இருக்க முடியாது. தேசியவாதம் என்பது பாட்டாளி வர்க்கச் சிந்தனைக்கு முரணானதும் முதலாளித்துவம் தன் நலன்கட்காகப் பாவிக்கும் ஒன்று என்பதும் மார்க்ஸியக் கனிப்பு. ஆயினும் மார்க்ஸியம் யாந்திரீக முறையில் இதை ஒரு சூத்திரமாகப் பயன்படுத்துவதில்லை. அது தேசிய உணர்வுகளை அவற்றுக்குரிய வரலாற்றுச் சூழ்நிலையில் வைத்தே கருதுகிறது. நிலவும் சமுதாயச் சூழலை வைத்தே அது தேசிய பிரச்சினைகட்குத் தீர்வு தேடுகிறது. இக் காரணத்தினாலேயே மார்க்ஸ் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினின்று அயர்லாந்து விடுதலைக்காகப் போராடியதை ஆதரித்தார். லெனினும், ஸ்டாலினும் கொலனிகளின் விடுதலைப் போராட்டங்களை அந்த அடிப்படையிலேயே ஆதரித்தனர். தலைவர் மாஓவின் நிலைப்பாடும் அதுவாகவேயிருந்தது. ஒரு மார்க்ஸியவாதியால் ஏககாலத்தில் சர்வதேசியவாதியாகவும், தேச பக்தராகவும் இருக்க முடியுமென்பதற்குச் சிறந்த முன்னுதாரணங்களாக ஹோ சி மின், மாஓ சேதுங், ஃபீடல் காஸ்ற்றோ போன்றோரைக் குறிப்பிட முடியும். தேசிய அடிப்படையிலான ஒடுக்கலையும், சுரண்டலையும், ஆக்கிரமிப்பையும் தேசிய அடிப்படையிலேயே போரிட நேருகிறது. ஆக்கிரமைப்பு நோக்குடைய தேசியவாதம் ஆதிக்கவெறி மிக்கதாகவும், பிற்போக்கானதாகவும் உள்ளது. மக்களின் உரிமைக்காக எழும் போராட்டத்தை வழிநடத்தும் தேசியவாதம் தேசப்பற்றாகவும் முற்போக்கானதாகவும் அமைகிறது.

இன்றைய உலகச் சூழலில் தேசிய உணர்வு, மொழிப் பற்று, இன உணர்வு, மத நம்பிக்கை என்பன பற்றி மார்க்ஸியவாதிகள் கடைப்பிடிக்கத்தக்க நிலைப்பாடும் மேற்குறிப்பிட்ட முறையிலேயே இருக்கின்றது. ஒரு தேசிய இனத்தின் இருப்பும் அதன் தேசியத் தன்மையும் மிரட்டலுக்கு உள்ளாகும்போது அந்த இனம் அம்மிரட்டலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்த்துப் போரிடுவது நியாயமானது. இது மொழி, இனம், மதம் போன்றவற்றுக்கும் பொருந்தும். இத்தகைய தனி மனித, சமுதாய உணர்வுகளைச் சில சூழ்நிலைகளில் பிற்போக்குவாதிகள் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டங் களுக்குப்பிளவூட்டிப் பலவீனமாக்கவும் பயன்படுத்தக் கூடும். அதுபற்றி மார்க்ஸியவாதிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதே வேளை, அக்காரணத்துக்காக மக்களது உணர்வுகளைப் புறக்கணித்தல் தவறானது. ஒவ்வொரு தேசிய இனத்தினதும் தேசிய இன உணர்வும் ஒவ்வொரு மொழி பேசுவோரதும் மொழி உரிமையும் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவரதும், மத நம்பிக்கைக்கான சுதந்திர மும் ஒவ்வொரு தேசத்தினதும் தேசியத் தன்மையும் மதிக் கப்பட வேண்டியன., இதில் மார்க்ஸியவாதிகட்குக் கருத்து வேறுபாட்டுக்கு அவசியமில்லை. மேற்கூறியவாறு மனித உணர்வுகளை மதிப்பதன் மூலமே மக்களிடையிலான சினேகப்பூர்வமான முரன்பாடுகளை சினேகப்பூர்வமாகத் தீர்க்கவும் சுரண்டப்படும் மக்களின் எதிரிகள் அவற்றைப் பகை முரண்பாடுகளாக வளர்க்காமலும் தடுக்க இயலும்.

தேசங்களின் சுயநிர்ணய உரிமைப் பற்றிப் பேசும் போது சிலர், ஒரு இனம் தனது தேசிய அந்தஸ்தை நிலை நாட்டுவதற்குச் சில நிர்ப்பந்தமான விதிகள் இருப்பதாகக் கருதுகின்றனர். ஸ்டாலின் ஒரு தேசத்தை அடையாளங் காட்ட வகுத்த நான்கு இலக்கணங்களும் இருந்தே தீர வேண்டும் என்று இவர்கள் வரட்டுத்தனமாக வாதிடுவார் கள். ஒரு குறிப்பிட்ட சமுதாய இனப்பிரிவு ஒரு தேசமல்ல என்று வாதிட ஸ்டாலின் வழிகாட்டலைப் பாவிப்போர் சில சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகளை அக்காரணங் கொண்டே மறுக்க முற்படுவதுண்டு. இதற்கு எதிர்வினையாகச் சிலர் தம்மைத் தேசிய இனமாகவோ, ஒரு தேசமாகவோ நிருவ வேண்டி வரலாற்றுத் திரிப்பில் இறங்குவதும் உண்டு. இவை எல்லாம் சமுதாய நடை முறையைச் சிந்தனையினின்று பிரித்து நோக்குவதன் விளைவுகளே.



மார்க்ஸியவாதிகள் மனிதரை மனிதர் அடக்கி ஒடுக்கு
வதையும், சுரண்டுவதையும் எதிர்க்கின்றனர். எனவே
எந்தெந்த வகையில் ஒடுக்கல் நிகழ்கிறதோ அதற்கேற்பவே
போராட்டமும் இருக்குமென அவர்கள் கருதுகின்றனர்.
எனவேதான் சாதி ஒடுக்கல், தேசிய ஒடுக்கல், நிற அடிப்
படையிலான ஒடுக்கல், பெண்ணடிமைத்தனம் போன்ற பல
விதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க ஒடுக்கலுக்கு
ஆளானோர் தொடுக்கும் போராட்டங்களை அவர்கள்
ஆதரிக்கின்றனர். அதேவேளை, ஒவ்வொரு ஒடுக்கலையும்
தனித்தனியாகப் பிரித்து ஒன்று மற்றதுடன் உறவில்லாத
படி காண மறுக்கின்றனர். இன்றைய உலகின் அடிப்படை
யான சமுதாய முரண்பாடு, வர்க்க முரண்பாடே. எனவே,
வர்க்க ஒடுக்கலுக்கும், சுரண்டலுக்கும் சார்பாகவே
சமுதாயப் பிரச்சினையை அவர்கள் அணுகுகின்றனர்.
ஒடுக்கலுக்கு உட்படும் மக்களை ஒன்றுபடுத்த முனைகின்ற
னர்; ஒடுக்கும் சிறுபான்மையினரைத் தனிமைப்படுத்த
செயற்படுகின்றனர். இவையெல்லாம் சந்தர்ப்பவாத
நோக்கிற் செய்யப்படுங் காரியங்களல்ல. மாறாகத் தெளி
வானதோரு அரசியற் சித்தாந்த வழிகாட்டலின் கீழ் மேற்
கொள்ளப்படுவன. இந்த வகையிலேயே இன்று இலங்கை
யின் முக்கியமான அரசியற் பிரச்சினையாகவுள்ள தேசிய
இனப் பிரச்சினை பற்றிக் கவனிப்போம். அதற்கும்
இன்றைய அரசியல் நெருக்கடிக்கும் காரணமாகவுள்ள
ஜனநாயக, மனிதவுரிமைகளின் மறுப்பிற்குமுள்ள
தொடர்பையும் ஆரார்ய்வோம்.

இலங்கையின் முக்கிய மொழிவாரி தேசிய இனங்
களாகச் சிங்கள மக்களையும் சகல தமிழ்ப் பேசும் மக்களை
யும் தமிழ் தேசியவாதிகள் காட்டி வந்துள்ளனர். சகல
தமிழ் பேசும் மக்களும் ஒரு தேசிய இனமாகக் கருதப்படுவ
தில் ஒரு அடிப்படையான தவறும் இல்லை. ஆயினும் தமிழ்
மக்கள் பல்வேறு அரசியல் காரணங்களாலும் வரலாற்று
நிர்ப்பந்தங்களாலும் மூன்று முக்கிய பிரிவுகளாக உள்ளனர்.
வட மாகாணம் - கிழக்கு மாகாணம் - கொழும்பும் பிற சிங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களப் பகுதிகளும் என்ற வகையில் வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழர் மத்தியில் பிரதேச வேறுபாடுகள் உள்ளன. ஆயினும் அவை வடக்கு - கிழக்குத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் என்ற வகையிலான வேறுபாடுகளினும் முக்கியமானவை அல்ல. இவ்வாறே சாதிப் பாகுபாடுகள் தமிழ் மக்களை வேறுபடுத்தும் நிலை இருந்தாலும் அவை சாதி அடிப்படையில் எந்த ஒரு பகுதியினரையும் ஒரு தேசிய இனமாகக் கருதும் நிலையை ஏற்படுத்தவில்லை.

முஸ்லிம் மக்களும் மலையக மக்களும் வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழரும் மொழிவாரியாக மட்டுமின்றி, வேறு வகைகளிலும் நெருங்கிய உறவு உடையவர்கள், முஸ்லிம்களின் மூதாதையர் சிலர் அயல்நாட்டினர் என்ற வாதம் சிலரால் அவர்களைத் தனித் தேசிய இனமாகக் காட்டப் பயன்படுகிறது. இவர்களுள் ஒரு பகுதியினர் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணும் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில் இவ்வாறு வாதிப்பார்கள். இன்னொரு பகுதியினர் முஸ்லிம்களையும் தமிழர்களையும் பகைமைப் படுத்தும் நோக்குடன் இவ்வாதத்தை முன்னெடுப்பார்கள். எவ்வாறாயினும் இது போன்ற விஷயங்களில், சம்பந்தப்பட்ட மக்களுடைய அபிப்பிராயமே முக்கியமானது. ஒரு சமுதாயப் பிரிவினர் தமது தனித்துவத்தைப் பேணுவதை விரும்பினால் அதை வலோற்காரமாக மறுக்க முனைவது தவறு. இவ்வாறான முயற்சிகள் சிநேக முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாகவே மாற்ற முனையும். எனவே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை அதன் முழுமையான ஜனநாயக ரீதியான கருத்திலேயே விளங்கிக் கொள்ளவும் பிரயோகிக்கவும் வேண்டும்.

(3) தேசிய இனப் பிரச்சினைக்கான நல்ல தீர்வைக் காண ஜனநாயக அடிப்படையில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்பது அவசியம் என்ற மார்க்ஸிய நிலைப்பாடு சரியாது. மூன்றாம் உலக நாடொன்றில் ஏகாதிபத்திய அரசியல் மிரட்டலின் கீழும் நவகொலனித்



துவ முறைக்கு உட்பட்ட பொருளாதார அமைப்பின் கீழும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடுவதற்குச் சகல ஏகாதிபத்திய விரோத சக்திகளையும் இணைப்பது அவசியம். இந்த இணைப்பைச் சாத்தியமாக்க ஒரு ஜனநாயக இலக்கு அவசியம். இன்றைய அடக்குமுறை ஆட்சியின் கீழான மனித உரிமை மீறல் கட்கும் ஜனநாயக மறுப்புக்கும் எதிரான ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்ப மனித உரிமைகளை உத்தரவாதப் படுத்தும் ஒரு ஜனநாயக வேலைத் திட்டம் அவசியம். நமது உடனடியான அரசியல் சூழலில் ஒரு சோஷலிஸ சமுதாய மாற்றத்தை விட அவசியமான பணிகள் உள்ளன, எனவே நாம் விரும்பும் ஜனநாயகம் பூரணமான சோஷலிஸ ஜனநாயகமாக அமைய இயலாது.

அதே வேளை இவ்வளவு காலமும் மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியதும் சர்வாதிகார முதலாளித்துவ அரசின் வருகையைத் தடுக்க இயலாது போனதுமான முதலாளித்துவ ஜனநாயக முறையும் நமக்குப் பொருந்தாது. அரசதிகாரத்தைப் பரவலாக்கி வெகுஜனங்களுக்கு மேலும் அதிக ஆளுமையைத் தரவல்ல ஒரு ஜனநாயக முறையே நமது உடனடித் தேவையாகும். அத்தகைய ஜனநாயகமே ஏகாதிபத்தியத்துக்குக்கெதிராக எண்ணிக்கையிலும் செயலூக்கத்திலும் மிகுந்த ஒரு பரந்துபட்ட மக்கள் சக்தியைக் கட்டியெழுப்ப வல்லது.

உற்பத்திச் சாதனங்கள் மீது தனியார் ஆதிக்கத்தை அகற்றி, அவற்றை உழைக்கும் மக்களது உடைமையாக்கி அவர்களது சார்பில் ஒரு சோஷலிஸ அரசு அவற்றை நிர்வகிக்கும் நிலையைப் பல உலக புரட்சிகள் உருவாக்கின. ஆயினும் மக்களுக்குப் பரிபூரண அரசியல் அதிகாரம் என்பது ஒரு நீண்டகால இலக்காகவே உள்ளது. அரசு என்ற ஒரு அமைப்பும் சலுகைகளையுடைய ஒரு அதிகார வர்க்கமும் உருவாகும் அபாயம் எப்போதுமே இருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்துள்ளது. புதிய அரசு நிருவாகிகளும் முகாமையாளர்களும் ஒரு வர்க்கமாகச் செயற்படவும் மக்கள் நலன்கள் பேணப்படாது போகவும் இடமுண்டு. பல நூற்றாண்டுக் காலச் சுரண்டற் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களைச் சில பத்தாண்டுகளில் ஒழித்துவிட முடியாது. விருத்தியடைந்த நவீன தொழிலுற்பத்தியுடைய சமுதாயத்தில் உள்ளதை விடத் தொழில் விருத்தியடையாத மூன்றாமுலக நாடுகளின் நிலை சிக்கலானது. முழு வலிமையற்ற ஒரு தொழிலாளி வர்க்கம் தன் நேச சக்திகளான கூலி விவசாயிகளையும், நிலமற்ற ஏழை விவசாயிகளையும் பிற உழைக்கும் மக்களையும் மட்டுமின்றிப் புத்தி ஜீவிகளையும் ஏகாதிபத்திய விரோத முதலாளிகளையும் சிறு முதலாளிகளையும் தன்னுடன் இணைத்துப் போராடியே ஏகாதிபத்தியத்திற்கு முகங் கொடுக்கிறது. ஒரு சோஷலிஸ வேலைத் திட்டத்தை உடனடியாகவே நடைமுறைப்படுத்த அது மிகவும் அவசரப்படுமாயின், ஐக்கியப்படக் கூடியவர்களையும் எதிரியிடம் தள்ளிவிடும் அபாயம் உண்டு. அதே வேளை சோஷலிஸமே அதன் நீண்ட கால நோக்கம் என்பது பற்றி ஒரு பாசாங்கும் இல்லை. எனவே, ஐக்கிய முன்னணியினுள், நாட்டின் பொருளாதார அடிப்படையும் திட்டமிடலும் மக்கள் அரசாங்கத்தின் ஆளுமைக்குட்பட்டே அமைய வேண்டும் என்பதிற் கருத்து வேறுபாட்டுக்கு இடமளிக்க முடியாது. அதே வேளை நியாயமான நட்டஈடு என்ற அடிப்படையிலும் அளவு மீறாத இலாபம் என்ற அடிப்படையிலும் உற்பத்திச் சகதனங்கள் அரசிற்கோ தனியாருக்கோ உடைமையாக இருக்க முடியும். இத்தகையதொரு சூழலில் முக்கியமான தேசிய செய்தி-தகவல் நிறுவனங்கள், பிரச்சார சாதனங்கள், விளம்பர வசதிகள் போன்றவை ஒருசில தனி நபர்கள் வசம் இருப்பது பல பிரச்சினைகளை எழுப்ப இடமுண்டு. எனவே மக்களது உழைப்பின் மீதும், சிந்தனை மீதும் தனியார் ஆதிக்கம் மேலை முதலாளித்துவ ஜனநாயக அமைப்புகளிற் போன்று அனுமதிக்கப்பட இயலாது. ஒவ்வொரு நாட்டின் குறிப்பான சூழ்நிலைக்குயேற்றவாறு இவ்வாறான தனியார் சுதந்திரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டியிருக்கும்.



தனியார் உடைமைக்கான சுதந்திரம் என்பது ஒரு மனிதர் மற்ற மனிதர்களைச் சுரண்டுவதற்கான சுதந்திரமாகவும், பத்திரிகைச் சுதந்திரம் என்பது பத்திரிகை உரிமையாளர்கள் சமுதாயத்தை தமக்கேற்ப வழிநடத்தும் சுதந்திரமாகவுமே முதலாளித்துவத்தின் கீழ் உள்ளது. முதலாளித்துவ நாடுகளும் தமது அதிகார வர்க்கத்தின் நலனுக்கு எதிராக உள்ள தனி மனித சுதந்திரங்களைப் பல வழிகளிலும் மறுக்கின்றனர். அயல்நாட்டு உற்பத்திகள் மீது இறக்கு மதித்தடைகளும் செய்தி நிறுவனங்கள் மீதான கண்காணிப்பும், அரச இயந்திரத்தின் ஜனநாயக மீறல்களும் முதலாளித்துவ நலன்கட்குப் பாதிப்பு ஏற்படும்போது அடிக்கடி நிகழ்வதை நாம் அறிவோம். எனவே மக்கள் நலன்கட்கு எதிரான விஷயங்களைத் தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கிற்குட்பட்ட அரசு மதிப்பது நியாயமானதே. ஆயினும், இவ்வாறான அரச நடவடிக்கைகள் பரந்துபட்ட மக்களது ஆதரவுடனும் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படுவது நன்மையானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஒரு வித்தியாசமாகும்.

மக்களது நலன்களைப் பேணுவதற்கு ஜனநாயகம் அவசியம். அது வசதிபடைத்த சிலரில் ஜனநாயகமாக இல்லாது, பரந்துபட்ட அடிப்படையிலான ஜனநாயகமாக அமைய வேண்டும். அதை உத்தரவாதப்படுத்த மக்களுக்குத் தமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் பூரண ஆளுமை அவசியம். இது அவர்களது உழைப்பு, அத்தியாவசியத் தேவைகள் போன்ற விஷயங்களுடன் மட்டுமன்றி அவர்களது உணர்வு தொடர்பான விஷயங்களையும் எட்டவேண்டும். மனிதர்களது மொழி, மதம், கலாச்சாரம் ஆகியன மதிக்கப்பட வேண்டும். அதே வேளை, இவை மனிதரை மனிதர் அடக்கி ஒடுக்கவும் இழிவு செய்யவும் இடமளியாதவாறு சமுதாய உறவுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் ஒற்றுமை மக்களின் கலாச்சார, மொழி, மத உணர்வுகளை, மதிப்பதன் மூலமே பேணப்படுகிறது. எப்போதாயினும் தன் தனித்துவம் அழிக்கப்படக்கூடிய அபாயம் இருக்கு மென்று கருதப்படும் நிலையிலேயே ஒரு சமுதாயம் அதற் கெதிராகச் செயற்படுகிறது. இதன் விளைவாகத் தீவிர மான மொழி, மத உணர்வுகளும் குறுகிய தேசியவாதமும் தலைதூக்குகின்றன. இதுவே சமுதாயங்களிடையான பகை முரண்பாடுகளுக்குக் காரணமாகிறது. ஒரு நாட்டின் ஐக்கியம் பலாத்காரத்தாற் சாத்தியமாகாது. மக்களி டையே பகை முரண்பாடுகள் சமுதாய நலனுக்கு விரோத மானவை. எனவேதான் மார்க்ஸியவாதிகள் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகின்றனர்.

சுயநிர்ணயம் என்பது ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தன் சமுதாய அமைப்பைத் தீர்மானிக்கவும் பேணவுமான உரிமையைக் குறிக்கிறது. ஒரு அரசமைப்பின் கீழ் உள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட தேசிய இனங்கள் இணைந்து ஒரே நாடாக வாழ்வதோ அல்லது தனித்தனி நாடுகளாகப் பிரிவதோ என்று தீர்மானிக்கும் உரிமை ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் உண்டு என்பதை மார்க்ஸியவாதிகள் ஏற்கின் றனர். அந்த அளவில் சுயநிர்ணயம் என்பது பிரிந்து போவதற்கான உரிமையை குறிக்கிறது, பிரிந்துபோவதற் கான உரிமையின் பிரயோகம் பிரிந்து போவது மட்டு மின்றி இணைந்து வாழ்வதும் அதில் அடங்கும். எந்த அடிப்படையில் தேசிய இனங்கள் இணைவது என்பதைத் தம் சுய விருப்பின் அடிப்படையில் அவை தீர்மானிக் கின்றன. பிறருடைய கட்டாயம் இல்லாது இணைந்து இயங்குவது சுயநிர்ணயத்தின் மூலமே சாத்தியம். ஏனெனில் சுயநிர்ணயம் இல்லாத போதுதான் நிர்ப்பந்தம் அவசிய மாகிறது. அந்த வகைகளில் சுயநிர்ணயம் ஜனநாயகத் தினின்று பிரிக்க இயலாத ஒன்றாகிறது. அது மட்டுமன்றி ஒரு தேசிய இனம் தன் சுயநிர்ணய உரிமையை நடை



முறைப்படுத்த அந்த தேசிய இனத்தினருக்கு ஜனநாயகம் இருக்க வேண்டும்.

4) இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைக் கான ஆதரவு 1983 வன்முறைக்குப் பின்னரே மிகவும் அதிக மாயிற்று. பிரிவினையை ஊக்குவிப்பதில் அயலவரின் பங்கும் இருந்தது. ஆயினும் நீண்ட காலமாகத் தேசிய இன ஒடுக்க லுக்கு உட்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்துத் தமிழ் மக்கள் (வசதிக்காகத் தமிழ்த் தேசிய இனமென்று இவர் களை அழைப்போம்) பிரிவினையைப் பற்றிச் சிந்திக்க நேர்ந்ததற்கு இலங்கை அரசாங்கங்களின் பேரினவாதமே முக்கிய காரணம். எனவே, இலங்கையின் ஐக்கியத்தை வலியுறுத்துவோர் முதலிற் பேரினவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பது அவசியம். தமிழ்த் தேசிய இனம் தன்னால் முன்னைய ஒற்றையாட்சி முறையின் கீழ் வாழ முடியாது என்றே கருதுகிறது. இது பற்றிக் கருத்து வேறு பாடு அதிகம் இல்லை. ஆயினும் பிரிவினை மட்டுமே தீர்வு என்று பெரும்பாலானோர் நினைப்பதாகக் கூறுவது கடினம். அரசின் இனவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கும் போது பிரிவினைக்கான விருப்பம் அதிகரிக்கிறது. அமைதிக் கான வாய்ப்பும் நியாயமான தீர்வு பற்றிய அக்கரையும் சிங்கள மக்களிடையே இருப்பதாக உணரும்போது பிரி வினை தவிர்ந்த தீர்வுகட்கு ஆதரவு அதிகரிக்கிறது. எனவே பிரிவினை அல்லாத தீர்வுக்கு அமைதி, ஜனநாயகம், தேசிய இனங்களிடையிலும், சிறுபான்மை இனப் பிரிவுகளிடை யிலும் புரிந்துணர்வு என்பன அவசியம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம் மக்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியா அல்லது அவர்கள் ஒரு தனித் தேசிய இனமா என்ற கேள்விக்கு வசதிக்கு ஏற்ற படி நேரத்துக்கு நேரம் வேறுபட்ட பதில்கள் தரப்பட் டுள்ளன. தமிழ்ப் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒரு தேசிய இனம் அடையாளங் காணப்படுமாயின் முஸ்லிம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களும், மலையகத் தமிழரும் அதனுள் அடங்குவர். அதே வேளை, முஸ்லிம் மக்களும், அவர்கள் போன்று, மலையகத் தமிழரும் சில தனித்துவமான இயல்புகளை உடைய சிறுபான்மை இனத்தவர், என்பதை மறுக்க முடியாது. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசும் எவரும் இவர்களது தேவைகளைக் கணிப்பில் எடுக்காமல் மொழி அடிப்படையிலான ஒரு தேசிய இனத்தின் சார்பாகப் பேசுவது நியாயமில்லை.

முஸ்லிம் மக்களுக்கும் மலையகத் தமிழ் மக்களுக்கும் வடக்கு - கிழக்கின் தமிழ் மக்களுக்கும் பொதுவான பல பண்புகள் உண்டு என்ற வகையில் அவர்களது தேவைகளை யொட்டி ஒன்றுபட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்படுவது சரியானது. அவர்களது பிரச்சினைகட்கான தீர்வுகளை ஒருங்கே கருதுவது நியாயமானது. அவர்களைப் பிளவுபடுத்தி ஒருவருக்கு எதிராக மற்றவர்களை திருப்பும் முயற்சிகளை எதிர்ப்பது அவசியமானது. அவர்களை ஒரு தேசிய இனமாகச் சுயவிருப்பின் அடிப்படையில் ஒன்றுபடுத்த முனைவது வரவேற்கத் தக்கது. அதே வேளை ஒரு சாராரின் நலனைப் பேண மற்றவர்களைப் பயன்படுத்தும் முறையில் மற்றோரைப் பயன்படுத்துவது தவறானது. எனவேதான் சுயநிர்ணய உரிமை அவர்களுக்கும் நீடிக்கப்படுவது அவசியம். தமிழ்த் தேசிய இனத்துடன் அவர்களை இணைத்துக் கருதும் சூழ்நிலை இல்லாத போது, அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதால் அவர்களது நியாயமான தேவைகள் மறுக்கப்பட்டு அவர்களது தனித்துவமும் பறிக்கப்படும் அபாயம் உண்டு. அச்சூழ்நிலையில் தமது தேசிய அந்தஸ்தை நிர்ணயிக்கும் உரிமை அவர்கட்கு இருக்க வேண்டும்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் அங்கு பரம்பரையாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களைச் சிறுபான்மையினோராக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது உண்மை. ஆயினும் அவ்வாறு குடியேறியவர்கள் பலர் அப்பகுதியிலேயே நீண்ட கால, நிரந்தரமான வாசத்தை உடையவர்கள். அவர்களது உரிமைகளை மறுப்பது ஜனநாயக விரோதமானதும் மனிதாபிமான மற்றதுமாகும். அரசியற் காரணங்கட்காக அண்மைக் காலங்களில் குடியேற்றப்பட்டவர்களின் பிரச்சினையும் அனுதாபத்துடன் நோக்கப்பட வேண்டும். அந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுடன் சுமூகமான உறவுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். வன்முறை மூலமும், ஜனநாயக - மனித உரிமைகளின் மறுப்பின் மூலமும் தேடப்படும் தீர்வுகள் மேலும் இனப் பகைக்கும் மோதல்கட்கும் வழி வகுக்கும்.



சுயநிர்ணய உரிமை என்றாற் பிரிவினையையே குறிக்கும் என்ற தவறான எண்ணம் பரவலாக இருந்து வருகிறது. விவகாரத்துக்கான உரிமை விவகாரத்துச் செய்யுமாறு எவரையும் வற்புறுத்துவதில்லை. அந்த உரிமை இருப்பதனால் பெண்களுக்குச் சமுதாயத்தில் கூடிய பாதுகாப்பு ஏற்படுகிறது. தாங்க முடியாத துன்பமிக்க தாம்பத்தியத்தினின்று விவகாரத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் விடுதலை தருகிறது. விவகாரத்துச் செய்வதற்கான உரிமை ஒரு சமத்துவமான நியாயமான உறவுக்கு உதவுகிறது. கள்ள உறவுகளும், தற்கொலைகளும், கொலைகளும், வன்முறையும் நிகழாது தடுக்க உதவுகிறது. விவாகரத்துச் சாத்தியம் என்ற காரணத்துக்காக மட்டுமே யாரும் அதை நாடுவதில்லை. அது போன்றே பிரிந்துபேகும் உரிமை இருப்பதால் மட்டுமே ஒரு தேசிய இனம் பிரிந்து போய் விடாது. அந்த உரிமை இல்லாதவிடத்து ஒரு தேசிய இனத்தின் உரிமைகள் மறுக்கப்படுமாயின் அந்த தேசிய இனம் அந்த உரிமைக்காக மட்டுமன்றி பிரிவினையைச் செயற்படுத்தவும் போராடுகிறது. தனக்கு மறுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையை அது போராடி வென்றெடுப்பதோடு மட்டுமல்லாது பயன்படுத்தியும் விடுகிறது. சுயநிர்ணய உரிமையை மறுப்பதன் மூலம் பிரிவினையைத் தடுக்க முனைவோர் இதை உணர வேண்டும். சுயநிர்ணய உரிமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பதன் காரணமாகப் பிரிந்து போயே ஆக வேண்டும் என்று வாதிப்பவர்களும், தமிழருக்குப் பிரிவினைவிட வேறு தீர்வே இல்லை என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். ''சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை'' என்று வாதிடுவது வரட்டுத்தனம். இந்த வாதத்தின்படி விவகாரத்துச் சாத்தியமான ஒரு நாட்டில், ஒவ்வொரு திருமணமும் விவகாரத்தில் முடிந்தே ஆக வேண்டும். இது அபத்தம். பிரிவினையே தீர்வு என் நினைப்போர் அக்கருத்தைப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்கிறார்கள் என்பதை நிலைநாட்ட வேண்டும். எனவே, ஜனநாயக முறையில், எவ்விதமான மிரட்டலோ வற்புறுத்தலோ இல்லாதவாறு, தம் தெரிவை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். வடக்கு-கிழக்கில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களது தெரிவுகள் மதிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களது தெரிவு பிரிவினையல்லாத பட்சத்தில், அது பற்றிய விவரங்கள் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சகல இனப்பிரிவுகளதும் கலந்தாலோசனையின் அடிப்படையில் அவர்களது அடிப்படை உரிமைகள் அனைத்தையும் உறுதிப்படுத்தும் முறையிலேயே தீர்மானிக்கப்பட முடியும். இவ்வாறே மலையகத் தமிழ் மக்களது தனித்துவத்தையும், உரிமைகளையும் உத்தரவாதம் செய்யவும் தமது பிரதேசத்திற்கு வெளியே வாழும் வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ், முஸ்லிம் மக்களது உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களது தெரிவு பிரிவினையின் வடக்கு - கிழக்கில் உள்ள பிற இனப்பிரிவுகளது நலன்களையும் அடிப்படை உரிமைகளையும் பேணி அவர்களது தெரிவுகட்கு இணங்கத் தேசிய எல்லைகள் உட்பட்ட சகல விவரங்களும் முடிவாக வேண்டும். இவ்வாறான தீர்வே நிலைக்கக் கூடியதும் நியாயமானதுமாகும்.

முதலாளித்துவ சமுதாயங்களில் உள்ள ஜனநாயக முறை வசதிபடைத்த சிலரின் நலன்களைப் பேணுமாறு



அமைக்கப்பட்ட ஒன்று. அந்த வசதிபடைத்த வர்க்கங்கள், அரசு முதலாக தகவல் ஸ்தாபனங்கள் வரையிலான சகலவற்றின் மீதும் ஆளுமை செலுத்துகின்றன. இலங்கையில் தேசிய இனப் பிரச்சினை உக்கிரமடைந்ததற்கு இந்தச் சக்திகளே முக்கிய காரணிகள். எனவே, தேசிய இனப் பிரச்சினையின் தீர்வை ஜனநாயகப் பிரச்சினையின் தீர்வினின்றும் பிரிக்க இயலாது. அதிகாரம் பரவலாக்கப்பட்ட ஒரு வெகுஜன ஜனநாயக முறையின் மூலமே மக்களின் விருப்பத்துக்கும் நலன்கட்கும் இசைவான ஒரு அரசாங்கத்தை உருவாக்க முடியும். வாழ்க்கையைப் பாதிக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் தீர்மானிக்கும் உரிமையை மக்களுக்கு வழங்குவதே ஜனநாயகம். பரவலாக்கப்பட்ட அரச அதிகாரம் அதற்கு அவசியம். சமஷ்டி, பிரதேச சுயாட்சி போன்ற எந்தத் தீர்வாயிருந்தாலும் ஒவ்வொரு ஆட்சியமைப்பிலும் உள்ள அதிகாரம் பரவலாக்கப்படுவதன் மூலமே தேசிய இனங்களிடையிலும் இனப் பிரிவுகளிடையும் நல்லுணர்வும் ஒத்துழைப்பும் சாத்தியமாகும்.

6) இன்று இலங்கையில் முன்பிருந்த முதலாளித்துவ ஜனநாயகம் இல்லை. ஊழலும், அதிகார வெறியும், அரச பயங்கரவாதமும், ஒடுக்குமுறையும் மிகுந்த ஒரு சர்வாதிகாரமே இருக்கிறது. மனித உரிமைகள் தினமும் அரசாங்கத்தினால் மீறப்படுகின்றன. விடுதலைப் போராட்டத்தின் பேராலும் அரசாங்கத்தை எதிர்க்கும் சாட்டிலும் மனித உரிமை மீறல்கள் நிகழ்கின்றன. இவற்றுக்கு அடிப்படையான காரணம், ஜனநாயக விரோதமான இன ஒடுக்கல் கொள்கையுடைய சர்வாதிகார அரசாங்கமே. எனவே இலங்கையின் சகல தேசிய இனங்களதும் இனப்பிரிவுகளதும் நலன்களையும், ஜனநாயக உரிமைகளையும் மனித உரிமைகளையும் நிலைநிறுத்துவதற்கான ஒரு ஐக்கிய முன்னணி அவசியம். மனித உரிமைகளை வலியுறுத்தித் தேசிய இனங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களது சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்யும் பரந்துபட்டதொரு தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே அத்தகைய முன்னணியைக் கட்டியெழுப்ப முடியும். சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி தேசிய இனங்களை ஐக்கியப்படுத்தி தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தின் அடிப்படையில் வெகுஜனங்களை அணிதிரட்டி மனித உரிமைகளை மீட்டெடுப்பதும் சகல தேசிய இனங்களதும் இனப்பிரிவுகளும் சமத்துவத்தை நிலை நாட்டுவதும் ஜனநாயகத்தையும் சமுதாய நீதியையும் வென்றெடுப்பதற்கும் சகல ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் ஐக்கியப்பட வேண்டும்.

---

**இனப்பிரச்சினையின் தீர்வை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு புதிய - ஜனநாயக கட்சி (10-12-91) சமர்ப்பித்த மகஜர் முழுமையாக இங்கு இடம்பெறுகின்றது.**

---

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ தலைவர் அவர்களே !

கௌரவ உறுப்பினர்களே ! !

நாட்டில் சமாதானத்தையும் சகஜநிலையையும் தோற்றுவிக்கும் வகையில், தேசிய நெருக்கடியாக வளர்ந்துள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றினைக் காண்பதற்கான முயற்சியில் இப்பாராளுமன்றத் தெரிவுக் குழு தெரிவு செய்யப்பட்டிருப்பதனையிட்டு எமது புதிய-ஜனநாயகக் கட்சி (முன்னாள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தனது பூரண திருப்தியைத் தெரிவித்துக் கொள்கின்றது. காலங்கடந்தாவது பாராளுமன்றத்தில் அரசாங்க எதிர்க்கட்சிகளின் முழுமனதான தீர்மானத்தின் அடிப்படையில் இத்தெரிவுக் குழுவினை உருவாக்கி இருப்பது வரவேற்கக் கூடியதாகும். இத்தெரிவுக் குழுவின் முயற்சிகள் மிகப் பரந்த அடிப்படையில் தேசம், மக்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றின் அடிப்படை நலன்களையும், அபிலாசைகளையும் உள்வாங்கி மனதில் கொண்டு இனப் பிரச்சினைக்கு ஓர் நியாயமான தீர்வினை உருவாக்க வேண்டும் என நாம் மனப்பூர்வமாக விரும்புகிறோம். இதன் அடிப்படையிலேயே எமது கட்சி தனது கருத்துக்களையும், ஆலோசனைகளையும், பிரேரணைகளையும் இத்தெரிவுக் குழு முன் சமர்ப்பிக்கிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் நேர்மையான தீர்வினை நாம் அனைவரும் தேடிக்கொள்ள முற்படும் போது திறந்த மனத்துடன் கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களையும், தூரநோக்குடன் தீர்வுகாணத் தவறிய அம்சங்களையும் முழுமையான கவனத்திற்கொள்வது அவசியமாகும்.

இந்த நாட்டில் பாராளுமன்ற ஆட்சிமுறையும், அதனைத் தொடர்ந்து சுதந்திரமும் கிடைக்கப் பெற்று



நாற்பத்திநான்கு வருடங்கள் சென்று விட்டன. இக்காலப் பகுதியில்தான் தேசிய இனப்பிரச்சினையானது தன்னை வெளிப்படுத்தி படிப்படியான வளர்ச்சியைக் கண்டு வந்தது 1948 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழித் தமிழர்களான தொழிலாளி வர்க்கத்தின் பிரசாவுரிமை - வாக்குரிமை என்பவற்றைப் பறிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தில் இனவாத உள்நோக்கம் கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் தொடக்கி வைக்கப்பட்டன. சுதந்திரம் எனப்பட்டது எமது நாட்டிற்கு வழங்கப்பட்டவுடன் முழுத் தேசத்தினதும் தேசிய இனங்களினதும் ஐக்கியத்தின் அடிப்படையில் ஓர் உறுதியான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி தேசிய சுதந்திரத்தை முழுமைப்படுத்தி ஸ்திரமாக்குவதற்குப் பதிலாக இனவாத விதைகளை விதைக்கும் பணிகளே முன்னெடுக்கப்பட்டன. இவையே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் ஆரம்பப் புள்ளிகளுமாயின.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களில் வளம்மிக்க விவசாய நிலங்களும் குடியிருப்புக் காணிகளும் நீர்ப்பாசனக் குளங்களும் திட்டமிட்ட குடியேற்றங்கள் வாயிலாகப் பறிக்கப்படுவது தொடர்பாகவே அடிப்படைப் பிரச்சினையும் முரண்பாடும் வெளிப்படத் தொடங்கியது. கிழக்கில் கல்லோயாக் குடியேற்றம் தொடக்கம் வடக்கில் கென்பாம், டொலர்பாம் குடியேற்றங்கள் வரையிலான பல பத்துக் குடியேற்றங்கள் இனவாத உள்நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. மேலும் இதனை நன்கு தெளிவுபடுத்திக் கூறமுடியும். இக்குடியேற்றங்களின் மூலம் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் அவர்களைக் குறிப்பிட்ட காலத்தில் சிறுபான்மையினராக்கி அவர்களது பலத்தை இழக்கச் செய்வது. அதேவேளை வடக்கு மாகாணத்தில் அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கான நிலப் பரப்பைக் குறுக்கித் துண்டாடி வடக்கு - கிழக்கு மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரம்பரிய இனத் தனித்துவங்களையும் தொடர்புகளையும் இல்லாமல் செய்யும் அதேவேளை என்றென்றைக்கும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகியோருக்கிடையிலான நிரந்தர இன மோதல்கள் இருந்து வருவதற்கான நீண்ட கால உள்நோக்கங்களையே இத்திட்டமிட்ட குடியேற்றங்கள் கொண்டிருந்தன. இக்குடியேற்றங்களின் மூலம் தேசிய பொருளாதார அபிவிருத்தி நோக்கைவிட தேசிய இனங்களைப் பிளவுபடுத்தி மோதவைக்கும் எண்ணங்களே முனைப்படைந்து நின்றன.

இது மட்டுமன்றி அன்றிலிருந்து இன்றுவரையான காலப்பகுதி பூராவும் பல்வேறு விதமான சட்டங்களும் செயல்பாடுகளும் தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான பாகுபாடுகள், புறக்கணிப்புக்களாக இடம்பெற்று வந்துள்ளன. இதனால் அவர்களது நிலம், நீர் - பொருளாதாரம், மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் சமூக கலாச்சாரத் துறைகள் அனைத்திலும் கடுமையான பாதிப்புகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டன. தமக்கு இனரீதியில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், உரிமை மறுப்புக்களுக்கும் எதிராகக் காலத்துக்குக் காலம் தமிழ் பேசும் மக்கள் பல்வேறு விதமான எதிர்ப்புக்களைத் தெரிவித்து அவற்றுக்கான கோரிக்கைகளையும் முன்வைத்து வந்தபோதிலும் அவை யாவும் மிக இலகுவாகவே தட்டிக் கழிக்கப்பட்டு மறுக்கப்பட்டன. அப்படியாகத் தட்டிக் கழிக்கப்பட்டு நிராகரிக்கப்படுவதன் எதிர்கால விளைவுகள் எவ்வாறான அபாயச் சூழலை எதிர்காலத்தில் உருவாக்கும் என்பதையிட்டு பாராளுமன்ற அதிகார பீடத்தில் இருந்த கட்சிகளும் அதில் பதவி பெற்ற பெரும்பாலான கட்சிகளும் தூர திருஷ்டியுடன் பார்க்கத் தவறிவிட்டன என்ற கசப்பான உண்மையை இன்றாவது உணர்ந்து ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அது மட்டுமின்றி காலத்துக்குக் காலம் இனப் பிரச்சினை சார்பாக சில தீர்வுகள் குறைந்தபட்ச அடிப்படையில் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சி நிலையில் இருந்தவர்கள் அத்தீர்வுகளை எதிர்ப்பதில்



மும்முரம் காட்டி வந்துள்ளமையும் இவ்வேளை சுட்டிக் காட்டப்படுதல் வேண்டும். இவை யாவும் பாராளுமன்ற அரசியல் தேவைக்காகவும், அதிகார நீடிப்பிற்காகவும், பதவி நோக்கங்களுக்காகவும் செய்யப்பட்டனவேயன்றி முழு நாட்டு மக்களினதும் பரந்த நலன்களின் அடிப்படையில் செய்யப்படவில்லை. இப்பாரிய தவறினை இழைத்ததில் சிங்கள அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் மட்டுமன்றி தமிழ்க் கட்சிகளும் அதன் தலைவர்களும்கூட கணிசமான பங்காற்றி நின்றனர் என்பதும் கவனத்திற்குரியதாகும். அரசியல் ஆட்சித்துறையிலே இழைக்கப்பட்ட இப்பெரும் தவறினால் இந்நாட்டின் சொந்த மக்களாகிய சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினர் தேசிய ரீதியில் ஐக்கியப்பட்டு சுபிட்சமான ஓர் எதிர்காலத்தை உருவாக்கும் வாய்ப்புக்கள் யாவும் சிதறடிக்கப்பட்டு அவர்களிடையே இனக் குரோதமும், அவநம்பிக்கைகளும், பகையாளிகள் என்ற மனோநிலைகளுமே வளர்க்கப்பட்டன. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தி விரக்தி, வெறுப்பு என்பன வளர்ந்து அவை ஆரம்பத்தில் அகிம்சைப் போராட்டங்களாகின. அவை பயனற்றுப் போகவே இறுதியில் இன்றைய ஆயுதம் தாங்கிய போராட்டம் என்ற நிலைக்கு வளர்ந்து வந்தது. இவ்வாறு இலங்கையின் இனப் பிரச்சினையை வளர்த்து வந்ததில் பாராளுமன்ற ஆட்சிமுறையும். அதனை இன்றைய உச்ச நிலையான யுத்த சூழலுக்கு தள்ளியதில் கடந்த பதிமூன்று வருடகால நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையும் பெரும் பங்கினை வழங்கியுள்ளதை இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1977 ஆம் ஆண்டிற்குப் பின் இனவாதம் இந்நாட்டின் பேரினவாதமாக உருவெடுத்து தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையாக விரிவடைந்து வந்துள்ளது. இப்பேரினவாதம், மத, கலாச்சார நிறுவனங்களாலும் அதன் தலைமைத்துவ சக்திகளாலும் நியாயப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தப்பட்டு ஆளும் நிலையில் உள்ளவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் வழங்கப்பட்டது. அதே வேளை மறுபுறத்தில் இன ஒடுக்குமுறையினால் எழுந்த விரக்தி, வெறுப்பு, எதிர்ப்பு என்பவை தமிழ் பேசும் மக்களிடையே முன்வைக்கப்பட்ட குறும் தேசியவாதக் கருத்துக்களுக்குத் தகுந்த ஆதரவினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆரம்பத்தில் இக்குறுந் தேசியவாதக் கருத்துக்கள் மிதவாத தமிழ்த் தலைவர்களினால் பிரசாரப்படுத்தப்பட்டு அகிம்சை ரீதியான வழிகளில் முன்னெடுக்கப்பட்டன. காலப்போக்கில் அதனைத் தீவிர இளைஞர் இயக்கங்கள் கையேற்று ஆயுதந் தாங்கிய போராட்டமாக மாற்றிக்கொண்டன. இன்று இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளும் செயற்பாடுகளும் நாட்டில் ஒரு யுத்தத்தையே நீடித்துச் செல்ல வழிவகுத்துள்ளது. இதனால் இன்று ஒரு இரத்த ஆறே ஓடிக்கொண்டிருக்கின்றது. பல ஆயிரக்கணக்கான, பெறும்திமிக்க மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. லட்சக்கணக்கான தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் தமது சொந்த இருப்பிடங்களை விட்டகன்று அகதிகளாக அலைந்தும் வருகின்றனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய இக்கட்டான நிலையில்கூட அரசியல் - அதிகாரத்திற்கான லாப - நட்டம் முதன்மைப் படுத்தப்படும் நிலையே நீடித்து வந்துள்ளதே தவிர தேசத்தின் முழுமையான நலன்கள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை என்ற உண்மை உணரப்படவேண்டும்.

கடந்த 44 வருடகாலத்தில் இனப்பிரச்சினை சார்பாக எடுக்கப்பட்ட தீர்வுக்கான பல்வேறு முயற்சிகள் நடவடிக்கைகள் ஏன் தோல்வி கண்டன என்பதை மதிப்பிற்குரிய இத்தெரிவுக்குழு இதய சுத்தியுடன் மதிப்பீடு செய்து கொள்வது இன்றைய தேவை என நாம் கருதுகிறோம். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், சாம் பி. சி. பெர்ணாண்டோ - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி -



செல்வநாயகம் ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் தோல்வி கண்டதுடன் புதிய பிரச்சனையையும் உருவாக்கிச் சென்றன. அதேபோல் ஒவ்வொரு கட்டத்திலும் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளும் பயனற்ற முயற்சிகள் ஆயின. திம்பு பேச்சு வார்த்தை, வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு, விடுதலைப்புலிகள் - பிரேமதாஸா அரசு பேச்சுவார்த்தை, தமிழ்க் குழுக்கள் - பிரேமதாஸா அரசு பேச்சுவார்த்தை போன்றனவும் வெற்றி பெறவில்லை.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் ஓர் இனக்கமான தீர்வு ஏற்படாமைக்கு அடிப்படைக் காரணம் ஆளும் தரப்பில் இருந்து தமிழ்பேசும் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு அம்சங்கள் முன்வைக்கப்படாமையே ஆகும். சில நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட குறைந்தபட்ச தீர்வுகள் கூட நடைமுறைப்படுத்தப் படுவது திட்டமிட்டே குலைக்கப்பட்டன. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் சட்ட உருவம் பெறுவதற்கு முன்பே ஆரம்பநிலையில் கருச்சிதைவு செய்யநிர்ப்பந்திக்கப்பட்டது. பின்வந்த மாவட்ட சபையும், மாகாண சபையும் சட்ட உருவம் பெற்று நடைமுறைப் படுத்தப்பட்டபோதும் அவை உருக்குலைக்கப்பட்டன. இவை யாவும் ஒரு விடயத்தையே சுட்டிக்காட்டுகின்றன. அதாவது தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அதிகாரத்தைப் பரவலாக்கி வடக்கு கிழக்கின் நிர்வாகத்தை அப்பிரதேச மக்களின் கைகளுக்கு வழங்குவதை ஆளும் தரப்பினர் விரும்பவில்லை என்பதேயாகும். மேலும், இவ்விடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கடந்த காலத்திலும் இன்றும் தமிழ்பேசும் மக்களின் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நியாயபூர்வ அடிப்படையில் அம்மக்கள் இந்நாட்டின் ஒரு பிரதான பிரிவினர் என்ற வகையிலும் நோக்கித் தீர்வுகளை முன்வைப்பதற்குப் பதிலாக அக் கோரிக்கைகளை முன்வைத்த தமிழர் அரசியல் தலைமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தப்பட்டு ஆளும் நிலையில் உள்ளவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் வழங்கப்பட்டது. அதே வேளை மறுபுறத்தில் இன ஒடுக்குமுறையினால் எழுந்த விரக்தி, வெறுப்பு, எதிர்ப்பு என்பவை தமிழ் பேசும் மக்களிடையே முன்வைக்கப்பட்ட குறும் தேசியவாதக் கருத்துக்களுக்குத் தகுந்த ஆதரவினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆரம்பத்தில் இக்குறுந் தேசியவாதக் கருத்துக்கள் மிதவாத தமிழ்த் தலைவர்களினால் பிரசாரப்படுத்தப்பட்டு அகிம்சை ரீதியான வழிகளில் முன்னெடுக்கப்பட்டன. காலப்போக்கில் அதனைத் தீவிர இளைஞர் இயக்கங்கள் கையேற்று ஆயுதந் தாங்கிய போராட்டமாக மாற்றிக்கொண்டன. இன்று இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளும் செயற்பாடுகளும் நாட்டில் ஒரு யுத்தத்தையே நீடித்துச் செல்ல வழிவகுத்துள்ளது. இதனால் இன்று ஒரு இரத்த ஆறே ஓடிக்கொண்டிருக்கின்றது. பல ஆயிரக்கணக்கான பெறுமதிமிக்க மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. லட்சக்கணக்கான தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் தமது சொந்த இருப்பிடங்களை விட்டகன்று அகதிகளாக அலைந்தும் வருகின்றனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய இக்கட்டான நிலையில்கூட அரசியல் - அதிகாரத்திற்கான லாப - நட்டம் முதன்மைப் படுத்தப்படும் நிலையே நீடித்து வந்துள்ளதே தவிர தேசத்தின் முழுமையான நலன்கள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை என்ற உண்மை உணரப்படவேண்டும்.

கடந்த 44 வருடகாலத்தில் இனப்பிரச்சினை சார்பாக எடுக்கப்பட்ட தீர்வுக்கான பல்வேறு முயற்சிகள் நடவடிக்கைகள் ஏன் தோல்வி கண்டன என்பதை மதிப்பிற்குரிய இத்தெரிவுக்குழு இதய சுத்தியுடன் மதிப்பீடு செய்து கொள்வது இன்றைய தேவை என நாம் கருதுகிறோம். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், சாம் பி. சி. பெர்னாண்டோ - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி -



செல்வநாயகம் ஒப்பந்தம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் தோல்வி கண்டதுடன் புதிய பிரச்சனையையும் உருவாக்கிச் சென்றன. அதேபோல் ஒவ்வொரு கட்டத்திலும் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளும் பயனற்ற முயற்சிகள் ஆயின. திம்பு பேச்சு வார்த்தை, வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு, விடுதலைப்புலிகள் - பிரேமதாஸா அரசு பேச்சுவார்த்தை, தமிழ்க் குழுக்கள் - பிரேமதாஸா அரசு பேச்சுவார்த்தை போன்றனவும் வெற்றி பெறவில்லை.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் ஓர் இணக்கமான தீர்வு ஏற்படாமைக்கு அடிப்படைக் காரணம் ஆளும் தரப்பில் இருந்து தமிழ்பேசும் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு அம்சங்கள் முன்வைக்கப்படாமையே ஆகும். சில நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட குறைந்தபட்ச தீர்வுகள் கூட நடைமுறைப்படுத்தப் படுவது திட்டமிட்டே குலைக்கப்பட்டன. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் சட்ட உருவம் பெறுவதற்கு முன்பே ஆரம்பநிலையில் கருச்சிதைவு செய்யநிர்ப்பந்திக்கப்பட்டது. பின்வந்த மாவட்ட சபையும், மாகாண சபையும் சட்ட உருவம் பெற்று நடைமுறைப் படுத்தப்பட்டபோதும் அவை உருக்குலைக்கப்பட்டன. இவை யாவும் ஒரு விடயத்தையே சுட்டிக்காட்டுகின்றன. அதாவது தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அதிகாரத்தைப் பரவலாக்கி வடக்கு கிழக்கின் நிர்வாகத்தை அப்பிரதேச மக்களின் கைகளுக்கு வழங்குவதை ஆளும் தரப்பினர் விரும்பவில்லை என்பதே யாகும். மேலும், இவ்விடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கடந்த காலத்திலும் இன்றும் தமிழ்பேசும் மக்களின் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நியாயபூர்வ அடிப்படையில் அம்மக்கள் இந்நாட்டின் ஒரு பிரதான பிரிவினர் என்ற வகையிலும் நோக்கித் தீர்வுகளை முன்வைப்பதற்குப் பதிலாக அக் கோரிக்கைகளை முன்வைத்த தமிழர் அரசியல் தலைமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களையும், அவற்றின் செயற்பாடுகளையும் மட்டும் அளவு கோலாகக் கொண்டு முழுத் தமிழ் மக்களினதும் அடிப் படைப் பிரச்சினைகளைத் தட்டிக்கழித்து வந்தமையு மாகும். இத்தகைய இன அரசியல் வக்கிரப் போக்கு மேலும் தொடரப்படக் கூடாது. இது போன்று நோக்கும் போக்குமே இனப்பிரச்சினையை இன்றைய மோசமான நெருக்கடிகளுக்கு இட்டுவந்தன என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இவ்வாறு கடந்த காலத்தில் இனப்பிரச்சினையை மிகவும் நுட்பத்துடனும் தூரநோக்குடனும் தீர்க்கத் தவறியதன் மூலம் ஒரு நாடு என்ற வகையில் ஐக்கியப்பட்டு முன்சென்று தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்து தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் பலபக்க நெருக்கடி களை நாடும் மக்களும் சந்திக்க நேர்ந்தது. அந்நிய சக்தி களின் ஊடுருவல்களும் அயல் நாட்டின் ஆக்கிரமிப்பும்கூட இடம் பெற்றன. இன்றும் அவற்றின் தீய கரங்கள் பின்னால் இருந்து செயற்பட்டு வருகின்றன. இவற்றை எல்லாம் கடந்த காலத்தின் எதிர்மறைப் பாடங்களாகவும் அனுபவங்களாகவும் கொண்டு இன்றைய சூழலில் இப் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப் பிரச்சினைக்கான நியாயமான தீர்வினை காண்பதில் முழுமையான வெற்றியை நிலைநாட்டிக் கொள்ளுதல் வேண்டுமென எமது கட்சி ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

நமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பெரும் சிக்கல் நிறைந்த ஒன்றாகவோ அன்றித் தீர்க்க முடியாத ஒன்றாகவோ கருதமுடியாது. சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தீர்வினைக் காண்பதில் திறந்த மனத் துடனும் தேசத்தையும், மக்கள் நலன்களையும் முதன்மைப் படுத்த முன்னுக்கு வந்தால் தகுதியான தீர்வினைக் கண்டு கொள்ள முடியும். இத்தகைய தீர்வுக்கு உலகில் ஏனைய நாடுகளின அனுபவங்களைக்கூட நமது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும். உதாரணத்திற்குக் கூறுவதாயின்



முற்றிலும் முதலாளித்துவ அமைப்புமுறை கொண்ட சுவிற்சர்லாந்து நாட்டில் அந்நாட்டின் விசேட நிலைமை களுக்கேற்ப இனப்பிரச்சினை குறிப்பிட்டளவு தூரத்திற்கு தீர்வினைக் கண்டுள்ளது. அதே போன்று சோஸலிசமயப் படுத்தப்பட்ட சீன மக்கள் குடியரசில் தேசிய இனப் பிரச்சினையானது பெருமளவிற்கு வெற்றிகரமாக தீர்வு காணப்பட்டுள்ளது. அவ்வாறெனில் நமது நாட்டின் புவியியல், வரலாறு, அரசியல், பொருளாதார நிலைமை களின் விசேட சூழ்நிலைக்கு ஏற்றவாறான ஓர் நியாயமான தீர்வினைக் காண்பதற்கு நாட்டின் சகல அரசியல் சக்தி களும் ஏன் தங்களை இவ்விடயத்தில் அர்ப்பணிக்கக்கூடாது என்பது முக்கிய கேள்வியாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக் களத்திலே காணப் படும் ஒரு விசேஷ அம்சத்தை அடையாளம் காணுதல் அவசியமாகும். அதாவது ஆளும் தரப்பிலே உள்ளவர்கள் தமிழ்பேசும் மக்களுக்கு குறைந்தபட்ச உரிமைகளைத் தானும் வழங்கத் தயாரில்லாத மறுப்பு நிலை, மறு புறத்திலே தமிழர்களின் தலைமை ஆகக்கூடிய கோரிக்கை யாக சமஷ்டி, பிரிவினை ஆகியவற்றை வலியுறுத்தி நிற்கும் யதார்த்தமற்ற எதிர்நிலை, இவ்விரண்டு நிலைகளும் நம் நாட்டைப் பொறுத்தவரை யதார்த்த எதிர் நிலைகளே யாகும். இத்தகைய நிலையில் இருந்துகொண்டு நியாய மான தீர்வு எதனையும் கண்டுகொள்ளவோ அன்றி சமாதானத்தையும் சகஜநிலையையும் ஏற்படுத்தவோ முடியாது என்பதே உண்மை நிலையாகும். ஆதலினாலேயே எமது கட்சி ஓர் யதார்த்தபூர்வமானதும் சாத்தியமானது மான தீர்வாக பிரதேச சுயாட்சி முறையினை முன் மொழிந்து வந்துள்ளது. இன்றும் அதனையே வற்புறுத்தி நிற்கின்றது. தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேச மான வடக்கு - கிழக்கு மகாணங்கள் இணைந்த பிரதேசத் தில் பூரணசுயாட்சி அமைப்பு முறையினை உருவாக்கி செயல்படுத்துவது. அதன் மூலம் நிர்வாகத்தைப் பரவலாக்கி அப்பிரதேச மக்கள் தமது காரியங்களைத் தாமே நிர்வகித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net



துக்கொள்ளும் வாய்ப்பினை வழங்க முடியும். அப்பிரதேசத்தின் நிலம், நீர், நிர்வாகம், பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளைத் தாமே நிர்வகித்து, சுயமான வளர்ச்சிகளையும், சுயதேவைகளையும் பூர்த்தி செய்யும் வாய்ப்பினை அவர்களுக்கு வழங்க முடியும். தமது மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றின் விருத்திகளையும் அந்த அமைப்பின் மூலம் அவர்களால் எவ்வித குறுக்கீடும் இன்றி முன்னெடுக்க முடியும். அத்தகைய பிரதேச சுயாட்சி அமைப்பானது தேசிய இனங்களிடையே நிலவிவரும் குரோதங்கள் மறைந்து போவதற்கும் ஏதுவாக அமைய முடியும். அதே வேளை முழுத் தேசத்தினதும் தேசிய பொருளாதாரம், தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம் என்பவற்றின் வளர்ச்சிக்கும் உறுதிபாட்டிற்கும் பெரும் உறுதுணையாகவும் அமைய முடியும் எனவும் நம்புகிறோம்.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு இப்பிரதேச சுயாட்சி அமைப்புக்குள்ளே உறுதியான சுயாட்சி உள்ளமைப்பினை அவர்களது தொகைப் பரம்பலுக்கு ஏற்ப ஏற்படுத்தல் வேண்டும். அதன் மூலம் அவர்களது தனித்துவங்களையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்துகொள்ள முடியும். எக்காரணங்கொண்டும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து மோதவைப்பதற்கான உள்நோக்கம் கொண்ட தனித்தனி அமைப்புமுறை எதுவும் ஏற்படுத்தப் படக்கூடாது என்பதையிட்டு மிகக் கவனமாகவும் நிதானமாகவும் நடந்துகொள்ளுதல் வேண்டும். அதே வேளை வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய அமைப்புமுறை பற்றியும் கவனத்திற்கு கொள்ளல் வேண்டும்.

வடக்கு கிழக்கிற்கு வெளியே தமிழ்பேசும் மக்களில் ஒரு பிரிவினராக இந்திய வம்சாவழித் தமிழ்மக்கள் மலையகத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மிக நீண்டகாலமாக இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டு வந்துள்ளனர். அண்மைய வருடங்களில் அவர்களைப் பேரளவில்



இலங்கைப் பிரஜைகள் எனக் கூறிக்கொண்ட போதிலும் அவர்களுக்குரிய அடிப்படை உரிமைகள் இன்னும் கேள்விக்குறியனவாகவே இருந்து வருகின்றன. எனவே இந்திய வம்சாவழித் தமிழ் மக்களை தேசிய சிறுபான்மையினராக அங்கீகரித்து அவர்களது உரிமைகளையும் அபிலாசைகளையும் பூரணப்படுத்தல் வேண்டும். அதற்குரிய வழி அவர்கள் செறிவாக வாழ்ந்து வரும் பிரதேசங்களை ஒன்றிணைத்து வலுமிக்க சுயாட்சி உள்ளமைப்பு ஒன்றினை மலையகத்தில் உருவாக்கிக் கொள்வதேயாகும்.

பிரதேச சுயாட்சி முறையும் அதனோடு இணைந்த சுயாட்சி உள்ளமைப்பு முறையும் முன்னெடுக்கப்படும் வேளை வடக்கு கிழக்கில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களின் உரிமைகள், அபிலாசைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நீண்டகாலமாக வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களோடு ஐக்கியமாக வாழந்து வரும் சிங்கள மக்களை இனக்குரோத நிலைக்குத் தள்ளிவந்ததில் சில குறிப்பிட்ட இன, வர்க்க தீய சக்திகளுக்குப் பெரும் பங்குண்டு. அதேவேளை ஒன்றுமறியாத, நிலமற்ற சிங்கள மக்கள் அத்தீய சக்திகளுக்குப் பலியாக்கப்பட்டனர். எனவே வடக்கு கிழக்கில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதும் - தமிழ் முஸ்லிம் மக்களுடன் ஐக்கியப்பட்ட புரிந்துணர்வை வளர்க்கக் கூடியதுமான பலம்மிக்க சுயாட்சி உள்ளமைப் பொன்று வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் சிங்கள மக்களுக்கு உருவாக்கப்படல் வேண்டும்.

எமது புதிய ஜனநாயகக் கட்சியின் மேற்கூறிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மதிப்பிற்குரிய பாராளுமன்ற தெரிவுக்குழு தனது பூரண கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம். அதேவேளை இனப் பிரச்சினையின் தீர்வுக்கான எமது குறைந்தபட்ச பிரேரனைகளாக கீழ்வரும் 15 (பதினைந்து) அம்சங்களை முன்வைக்கின்றோம்.

www.tamilarangam.net



## தேசிய இனப் பிரச்சினைக்கான குறைந்தபட்சப் பிரேரணைகள்

1) தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக ஒன்றிணைக்கப்பட்டு அப்பிரதேசத்தில் முழு அதிகாரங்களும் கொண்ட பூரண பிரதேச சுயாட்சி அமைப்பு முறையும் அதனோடு இணைந்த சுயாட்சி உள்ளமைப்புகளும் உருவாக்கப்படுதல் வேண்டும்.

2) இவ்வாறு உருவாக்கப்படும் அமைப்புமுறையினை வடக்கு - கிழக்கு பிரதேச சுயாட்சிப் பிரதேசம் எனப் பெயரிடப்படுதல் வேண்டும். அதன் எல்லைகள் ஏற்கனவே இருந்து வரும் வடக்கு - கிழக்கு மகாணங்களின் எல்லைகளாக இருத்தல் வேண்டும்.

3) இப்பிரதேச சுயாட்சி உள்ளமைப்பினதும் அதனோடு இணைந்த சுயாட்சி உள்ளமைப்புகளினதும் அதிகாரங்களும், செயற்பாடுகளும் தெளிவாக வரையறுக்கப்படுதல் வேண்டும். அதே வேளை மத்திய அரசின் அதிகாரங்கள், கடப்பாடுகள். செயற்பாடுகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதும் தெளிவுபடுத்தப்படுவதுடன் மேற்குறித்த யாவும் அரசியல் யாப்பு ரீதியான உத்தரவாதத்தைப் பெறுதல் வேண்டும்.

4) வடக்கு-கிழக்கு பிரதேச சுயாட்சிப் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களின் செறிவுக்கு ஏற்றவிதமாக மாவட்டங்களை இணைத்தோ, அன்றித் தனித்தனியாகவோ கொண்ட



ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதாகவோ பலமான சுயாட்சி உள்ளமைப்புக்களை உருவாக்குதல் வேண்டும். இவ்வமைப்புகள் வாயிலாக முஸ்லிம் மக்கள் தமது பொருளாதார, நீர், நில வேலைவாய்ப்பு, கல்வி போன்றவற்றில் பூரண உரிமைகளைப் பெற்றிருக்க வகைசெய்யப்படுதல் வேண்டும். அதேவேளை அவர்களின் மத - கலாசார அம்சங்களுக்கு உரிய இடத்தினை வழங்கி அவர்களது தனித்துவத்தை ஏற்று மதித்து செயல்படும் விதமாக இச்சுயாட்சி உள்ளமைப்பின் அதிகாரங்களும், செயற்பாடுகளும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

5) முஸ்லிம் மக்களின் சுயாட்சி உள்ளமைப்பின் அதிகாரங்களிலும், செயல்பாடுகளிலும் மத்திய அரசோ அன்றி வடக்கு கிழக்கு பிரதேச சுயாட்சி நிர்வாகமோ எவ்வித தலையீட்டையும் குறுக்கீட்டையும் கொண்டிருக்காதவாறு இவ்வமைப்பின் அதிகாரங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

6) வடக்கு - கிழக்கு பிரதேச சுயாட்சி பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் பூர்த்திசெய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான சுயாட்சி உள்ளமைப்பு வலுவானதாக அமைக்கப்படுதல் வேண்டும்.

அதேபோன்று இப்பிரதேச சுயாட்சி அமைப்புக்கு வெளியே வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய விதமான உள்ளமைப்புக்கள் ஏனைய பிரதேசங்களில் நிறுவப்படுதல் வேண்டும்.

7) நிலமின்மையாலும் பொருளாதார, கல்வி, தொழில் போன்றவற்றினால் பின்தங்கிய வகையில் இன்றும் பல பகுதிகளில் பின்தங்கிய சமுதாயப் பிரிவினராக வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக

www.tamilarangam.net



முன்னேற்றத்திற்கான வசதிகளும் சலுகைகளும் ஏற்றவிதமாக உத்தரவாதப்படுத்தி பிரதேச சுயாட்சி அமைப்பில் வழங்கப்பட வேண்டும்.

8) வடக்கு கிழக்கு பிரதேச சுயாட்சி அமைப்பின் கீழ் அப்பிரதேசத்தின் விவசாயம், கைத்தொழில் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சுயமான பொருளாதார விருத்திக்குத் தடைகள், தலையீடுகள் ஏற்படுத்தப்படுவது நிர்வாக - சட்ட ரீதியாக தடுக்கப்படுவதற்கு உத்தரவாதம் வழங்கப்படுதல் வேண்டும்.

9) இப்பிரதேச சுயாட்சிப் பிரதேசத்தில் நிலப்பகிர்வை மேற்கொள்வதற்கும், நீர்பாசனத்தை ஒழுங்குப் படுத்தவும், குடியேற்றங்களை உருவாக்குவதற்கும் பிரதேச சுயாட்சி அமைப்பிற்கு பூரண அதிகாரம் வழங்கப்படல் வேண்டும். 1977 ஆம் ஆண்டுக்குப்பின் வடக்கு கிழக்கில் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் யாவும் அகற்றப்படல் வேண்டும். அதேவேளை மத்திய அரசு ஏற்படுத்த விரும்பும் குடியேற்றத் திட்டத்தை பிரதேச சுயாட்சி அமைப்பு ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் பூரண உரிமை இருக்க வேண்டும்.

10) வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நிதி, நீதி, நிர்வாகம் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் கலாசார துறைகள் அனைத்தும் அரசியல் அமைப்பிற்கு அமைய சுதந்திரமான வழிகளில் அப்பிரதேச மக்களின் தேவைக்கேற்றவாறு முன்னெடுக்கப்படுவதற்கும் வளர்க்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

11) வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் உள்ளூர் பாதுகாப்பிற்கான பொறுப்பினை மேற்படி பிரதேச சுயாட்சி நிர்வாகத்



திடம் இருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். மேலும், அந்நிய அச்சுறுத்தல் - ஆக்கிரமிப்புக்கான சூழல் இல்லாத நிலையில் இராணுவத் தளங்கள் வைத்திருப்பது அல்லது விஸ்தரிப்பது பற்றிய முடிவை பிரதேச சுயாட்சி நிர்வாகத்துடன் கலந்து பேசி முடிவினைக் கொள்ளல் வேண்டும்.

12) தேசிய மட்டத்திலும், பிரதேச சுயாட்சி மட்டத்திலும் இனம், மொழி, சாதி, மதம், பால் போன்றவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிரான உறுதிமிக்க நடவடிக்கைகளை அடிப்படை மனித உரிமை, ஜனநாயக உரிமை, தொழிற்சங்க உரிமை என்பவற்றின் வழிநின்று வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

13) மலையகத்தில் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழி மக்கள் தமது இனத்தனித்துவங்களையும், தன்னடையாளங்களையும் பேணிப் பாதுகாத்து விருத்தி செய்யும் வகையில் அவர்களுக்கான சுயாட்சி உள்ளமைப்புக்கள் அப்பிரதேசத்தில் உருவாக்கப்படுதல் வேண்டும்.

14) மலையக மக்களுக்கான சுயாட்சி உள்ளமைப்பானது அவர்கள் செறிவாக வாழ்ந்துவரும் மத்திய ஊவா, சப்பிரகமுவா மாகாணங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்படுதல் வேண்டும். அதேவேளை இச் சுயாட்சி அமைப்பிற்கு வெளியே வடக்கு கிழக்கு உட்பட ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழி தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கக் கூடிய வகையில் சுயாட்சி உள்ளமைப்புக்களில் உரிமைகள் வரையறுக்கப்படுதல் வேண்டும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



15) மலையகத்தில் மலையக மக்களுக்கான வலுவுள்ள சுயாட்சி உள்ளமைப்பினாலும் ஏனைய சிறு அளவிலான உள்ளமைப்புக்களாலும் அவர்கள் நீண்டகாலம் போராடிப் பெற்றுவந்ததும் - வெறும் பெயரளவிலானதாக இருந்து வருவதுமான பிரசாவுரிமை, வாக்குரிமை உட்பட பெற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய அடிப்படை உரிமைகளையும் பூரணப்படுத்த முடியும். அதன் அடிப்படையில் அவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, கல்வி, வீடமைப்பு, சுகாதாரம், மற்றும் மொழி கலாசாரத் துறைகளிலான வளர்ச்சிக்கு முழுமையான வாய்ப்புக்கள்வழங்கப்பட முடியும்.

ஃ ஃ ஃ

கௌரவ தலைவர் அவர்களே !

கௌரவ உறுப்பினர்களே !

எமது புதிய ஜனநாயகக் கட்சி தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான குறைந்தபட்ச பிரேரணைகளாக மேற்குறித்த 15 அம்சங்களை முன்வைத்துள்ளதை தாங்கள் கவனத்தில் கொள்வீர்களென நம்புகிறோம். இப்பிரேரணைகளில் இலங்கைத் தமிழர், முஸ்லிம் மக்கள், இந்திய வம்சாவழித் தமிழர் ஆகிய முப்பிரிவினரையும் கொண்ட தமிழ் பேசும் மக்கள் என்றழைக்கப்படும் இந்நாட்டின் பிரஜைகள் எதிர்நோக்கியுள்ள தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகள் அடங்கியுள்ளன. இவ் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த முயல்வதன் மூலம் இலங்கையின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம் என்பனவற்றிற்கு எதிராக இருந்துவரும் அபாயத்தை இல்லாதொழிக்க முடியும். அந்நிய சக்திகளின் தீய நோக்கங்களை முறியடிக்க முடியும். இந்நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினர் ஒன்றுபட்டு தலைநிமிர்ந்து இலங்கையர்கள் என்ற ரீதியில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நிற்க முடியும். உண்மையான தேசியம் மலர முடியும். அதன்மூலம் தற்போது இழந்துநிற்கும் அடிப்படை ஜனநாயக, மனித உரிமைகளை மீட்டெடுத்து நிலை நிறுத்தவும் முடியும்.



இன்றைய நிலையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு தேசிய இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கு தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வினை முன் வைத்து அதனை சிங்கள மக்கள் ஆதரித்து நிற்கும் சூழலை உருவாக்காது விட்டால் அடுத்துவரும் ஓரிரு தசாப்தங்களில் இப்பிரச்சினைக்கு பாரிய விலையினை கொடுக்கவேண்டி ஏற்படலாம். அவ்வேளை நாம் இன்று முன்வைக்கும் குறைந்தபட்சத் தீர்வான பிரதேச சுயாட்சி என்பதற்கும் மேலான சமஷ்டிமுறை அல்லது பிரிவினைகூட அந்நிய சக்திகளின் முழுமையானதும் பகிரங்கமானதுமான ஆதரவுடன் சாத்தியமாகலாம். எனவேதான் எதிர்காலத்தின் இந்நாட்டு மக்கள் அனைவரினதும் நலன் கருதி தூரதிருஷ்டியுடன் இன்றைய அரசியல் சக்திகள் மிக நிதானத்துடன் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வினை இதய சுத்தியுடன் உருவாக்க வேண்டும் என எமது புதிய ஜனநாயக கட்சி வேண்டிக் கொள்கின்றது.

இப்பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வினை இனப்பிரச்சினைக்கு முன்வைக்கும் பட்சத்தில் நிபந்தனையற்ற உடனடி யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் இடம்பெற வேண்டும். பேச்சுவார்த்தையில் அரசாங்கம் அரசியல் கட்சிகள், தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் தமிழர் இயக்கங்கள் யாவும் பங்குகொள்ளல் வேண்டும். இத்தகைய புதியதோர் அரசியல் சூழலை இனப்பிரச்சினை சார்பாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்படுத்தி அதனூடாக நாட்டில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் ஏற்படுத்துவதொன்றே இன்றிருக்கக்கூடிய சாத்தியமானதும் சரியானதுமான ஒரே வழிமுறையாகும் என்பதை எமது புதிய ஜனநாயகக் கட்சி வற்புறுத்துகின்றது.

நன்றி!

**(இ. தம்பையா)** **(சி. கா. செந்திவேல்)**
தேசிய அமைப்பாளர், பொதுச் செயலாளர்,

**மத்திய குழு**
**புதிய ஜனநாயகக் கட்சி**

கொழும்பு.
*10-12-1991*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்